viber : 076 636 3378
பக்கங்கள் : 12


# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 240 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 31 செவ்வாய்க்கிழமை (16.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்த சீனக் கப்பல்

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை இன்று காலை வந்தடையும்





(கொழும்பு)

சர்ச்சைக்குரிய சீனாவின் உளவுக் கப்பலான யுவான் வேங் - 5 இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்துள்ளது.

குறித்த கப்பல் இன்று காலை 7.30 மணியளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (11ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில்

## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் தனிமையில் இருந்த முதியவர் ஒருவர் வீட்டின் பின் பக்கம் நேற்று சடலமாக மீட்கப்பட் 11

## கொரோனா +3 மரணம் +129 தொற்று

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 3 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, நாட் 11

எதிர்வரும் நாட்களில்

## 3 மணி நேரம் மின்வெட்டு அமுல்

(கொழும்பு)

நாட்டில் இன்று முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை 3 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப் 11

இந்தியாவும் இலங்கையும்

# ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்

## சீனக் கப்பல் இலங்கை வரும் நிலையில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

வரலாறு இந்தியாவையும் இலங்கையையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போல இணைத்துள்ளது என்றும் இரு நாடுகளும் ஒன்றிணைந்து முன்னேற வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (11 ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை நகரில்

## தையலகத்தில் வாள்வெட்டுத் தாக்குதல்

ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் உள்ள தையலகத்தில் உள் நுழைந்த முகமூடி 11

## அனைத்து சவால்களையும் சமாளிக்க இந்தியா நன்கு தயாராக உள்ளது

### சீனக் கப்பல் விவகாரம் தொடர்பில் இந்திய கப்பல் துறை அமைச்சர் சர்பானந்த

(சென்னை)

சீனக் கப்பலை தனது கடற்பகுதியில் நிறுத்த இலங்கை அனுமதித்ததை அடுத்து, எழும் எந்த சவால்களையும் சமாளிக்க இந்தியா நன்கு தயாராக உள்ளது என்று இந்தியாவின் மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் 11

## எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும்

எரிசக்தி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த மாதத்தில் இரண்டாவது முறையாகவும் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச சந்தையில் ஏற்படும் விலை மாற்றத்துக்கமைய, உள்ளூரில் எரிபொருள் விலை சூத்திரத்தின் 11

## இலங்கைக்கு கையளிக்கப்பட்ட இந்திய உளவு விமானம்



07ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையுடன் உறவினை வலுப்படுத்த எதிர்பார்க்கின்றோம்

இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)

இலங்கையுடன் உறவினை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்ட அறிக் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் யானை, கதகளியுடன் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழா





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவொன்று பலரையும் வியக்க வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியின் பூநாரி மடத்தடியில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் பூப்புனித நீராட்டு விழாவொன்று இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

இதற்காக வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவில் பகுதியில் இருந்து நிகழ்வு மண்டபம் வரை காங்கேசன்துறை வீதி வழியாக யானை, குதிரை வண்டில், கதகளி, மேள தாள வாத்தியங்கள் சகிதம் பெண் மற்றும் அவரது உறவினர்கள் பவனியாக மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர்.

தென்பகுதியில் இருந்து யானை மற்றும் கதகளி கலைஞர்கள் கொண்டுவரப்பட்டு இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிலையில் அதனை காண்பதற்காக பெருமளவு மக்கள் ஒன்றுகூடினர்.

(ம-7,33,104)

### பெண் உதைந்ததில்

# ஓடும் பேருந்திலிருந்து கீழே விழுந்த நடத்துநர்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த பேருந்தில் பயணித்த பெண்ணொருவர் நடத்துநரை உதைந்ததில் பேருந்தில் இருந்து தூக்கி வீசப்பட்டதாக கடவட பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தில் கிரிபத்கொடையைச் சேர்ந்த பெண் ஒருவர் ஏறியுள்ளார். பயணச்சீட்டு எடுக்குமாறு நடத்துநர் தெரிவித்தபோது, கையால் தாக்கி உதைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன், பேருந்தில் இருந்த சிலர் அந்த பெண்ணை பிடித்து கடவத்தை பொலிஸில் ஒப்படைத்தனர்.

குறித்த பெண் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும், 34 வயதுடைய அவர் பல வருடங்களாக மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாகவும் குடும்ப உறுப்பினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

பெண்ணும் நடத்துநரும் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், குறித்த பெண் மனநல மருத்துவரிடம் பரிந்துரைக்கப்படவுள்ளார். (ம-7)

### நுரைச்சோலை மின் நிலையம்

# வழமைக்குத் திரும்ப 14 - 16 நாட்களாகும்

(புத்தளம்)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் பழுதடைந்துள்ள முதலாவது மின் பிறப்பாக்கியின் திருத்தப் பணிகள் நிறைவடைவதற்கு சுமார் 14 - 16 நாட்கள் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று முதல் மின்வெட்டை நீடிக்க வேண்டியுள்ளதாகவும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை ஏற்பட்ட பழுதினால், நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலிருந்து தேசிய மின்விநியோகத்திற்கு முழுமையான பங்களிப்பு செய்ய முடியாமல் போயுள்ளது. (ம-7)

### புங்குடுதீவில் நாய் கொலை

# முதன்மைச் சந்தேகநபர் பொலிஸில் நேற்று சரண்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் நாய் ஒன்றை கைக்கோடரியினால் கொலை செய்த முதன்மைச் சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்றைய தினம் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வரும் ஓகஸ்ட் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.


"போதைப் பொருளுக்கு அடிமையாகியதால் ஊரில் திருட்டுகளில் ஈடுபட்டோம். எம்மைக் கண்டவுடன் நாய் குலைத்து காட்டிக்கொடுத்து விடும்.

இதனால் அங்கு இடம்பெறும் திருட்டுகளுடன் எமக்குத் தொடர்பு உண்டு என பொலிஸார் விசாரணைக்கு அழைப்பார்கள். அதனால் தான் அந்த நாயைக் கொலை செய்தோம்.

கைக்கோடரியினால் வெட்டி கொலை செய்தவர் அன்றைய தினம் போதையில் இருந்தார். சில நாட்களுக்கு முன்பாகவே நாயை கொலை செய்துவிட்டோம்.

அதன் காணொளி சகோதரனின் அலைபேசியில் இருந்தது. அந்தக் காணொளி தவறுதலாக ரிக்ரொக்கில் பதிவேற்றப்பட்டுவிட்டது" என்று காணொளியை பதிவெடுத்தவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார். (ம-7)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1993 – 11 – 05

உதிர்வு 2013 – 07 – 27

### அமரர் சண்முகநாதன் பிரசாத்

எங்கள் செல்வமே பிரசாத்
ஆண்டுகள் ஒன்பது முடிவடைந்தபோதிலும்
நீ தினமும் எங்களுடன் வாழ்ந்து கொண்டேதான் இருக்கிறாய்
நிலவும் இருட்டும் மாறி மாறி வரும்
ஆனால் எங்கள் நினைவோ பிரசாத் என்றுமே
மாறாது மறையாது
தினமும் சூரியனைப் போல் பிரகாசித்தவண்ணமே இருக்கும்
"நீ எங்களுடன் பத்தொன்பது ஆண்டுகள்
சிரித்து பேசியதும் சாப்பிட்டதும் தூங்கி எழும்பிய
நாட்களும் எங்களை தினமும் வாட்டி வதைக்கும்"
உன் நண்பர்கள் இட்ட பெயர் சிரிப்பு
ஆண்டவனும் உன் சிரிப்பில் ஆசைகொண்டு தன்னுடன்
அழைத்துவிட்டார்.
நாம் ஆண்டவன் காலடி சேரும்போது
அவர் அருகில் இருந்து எங்களை அடையாளம் கண்டு
ஓடி வந்து அணைத்து முத்தம் இடும் காலம்
நிச்சயம் ஒருநாள் வரும்
அதுவரை உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
எங்கள் உயிர் செல்வமே பிரசாத்.

*உன் பிரிவால் துயருறும்*

சிறிய [illegible],
பெற்றோர், [illegible]மார்,
அண்ணிமார், பெறாமக்கள்.

பத்திரகாளி கோயிலடி,
பொலிகண்டி, கிழக்கு,
வல்வெட்டித்துறை.

(C-4743)

# புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கத்தை வரவேற்கின்றோம்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

"சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பயங்கரவாதப்பட்டியலில் இருந்து இலங்கை அரசால் நீக்கப்பட்டதை நாங்கள் வரவேற்கின்றோம்" என்று தமிழ்த் தேசிய க் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"பயங்கரவாதப் பட்டியலில் எஞ்சியிருக்கும் ஏனையவர்கள் கூட பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லாததுடன் மேலும் பரிந்துரைக்கப்பட்ட நடை முறையைப் பின்பற்றாமல் அவர்கள் அவ்வாறு பெயரிடப்பட் டுள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்பட்டியலில் பெயரிடப்பட்டிருக்க வேண்டியவர்கள் அல்லாத அனைத்து தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மறுமதிப்பீடு மற்றும் தடை நீக்கம் செய்யும் இந்தச் செயல்முறையை குறைந்த பட்சம் தொடருமாறு நாங்கள் அரசை வலியுறுத்துகின்றோம்" என்றார். (ம-7)

# 9,000 புள்ளிகளைக் கடந்த கொழும்பு பங்குச் சந்தை

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 9,191.52 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் நாள் ஒன்றுக்கான அனைத்துப்பங்கு விலைச் சுட்டெண் அதிகபட்சமாக 164.04 ஆக நேற்று பதிவாகியுள்ளது.

மேலும், நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் பங்குச் சந்தையின் மொத்த புரள்வு 5.82 பில்லியன்களாக பதிவாகி உள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புக்களின் தடைநீக்கம்
# சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு விளையாட்டு
## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவிப்பு

**(லண்டன்)**
**இலங்கை அரசாங்கம் தனது தடைப்பட்டியலில் இருந்து புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை நீக்கம் செய்வதும் நீடிப்பதும் சர்வதேசத்தினை ஏமாற்றும் ஒரு வேடிக்கை தந்திர விளையாட்டையே வெளிப்படுத்தி வருகின்றது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளது.

தற்போது, அடுத்த சில வாரங்களில் ஐ.நா. மனித உரிமைச்சபைக் கூட்டத்தொடர் தொடங்க இருக்கின்ற நிலையில் மற்றுமொரு பட்டியல் வெளிவந்துள்ளது. இது சர்வதேசத்தினை ஏமாற்றும் வேடிக்கை விளையாட்டையே வெளிக்காட்டுகின்றது.

இலங்கையின் இந்த நடத்தையானது 2012 ஆம் ஆண்டு ஐ.நா. ஒழுங்குமுறை இலக்கம் 1ஐ, இலங்கை துஷ்பிரயோகம் செய்வதனை நிரூபிக்கின்றது. ஐ.நா.வின் நம்பகத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

இதேவேளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மீது தொடரும் தடையானது, "தமிழீழம்" என்ற கொள்கை, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் உறுதி யுடனும் செயற்படுகின்றோம் என்பதனை சான்று பகிர்வ தாகவே இலங்கையின் இந்த அச்சம் வெளிப்படுத்துகின்றது.

நாடுகடந்த தமிழீழ அர சாங்கம் என்பது, ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உலகெங்கிலும் பல நாடுகளில் வாழும் இலங்கைத் தீவைச் சேர்ந்த பத்து இலட்சத்துக்குப் மேற்பட்ட தமிழர்களுக்கான அரசாங்கமாகும்.

தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க்குற்றங்கள், மனித குல த்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை புரி ந்த குற்றவாளிகளைப் பொறு ப்புக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் கோருவதுடன் தமிழர்களின் அரசியல் எதிர் காலத்தைத் தீர்மானிக்க பொது சன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் நாடு கட ந்த தமிழீழ அரசு வலியுறுத்து கிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை
# சர்வகட்சி ஆட்சிக்குள் கொண்டுவர
# அரசாங்கம் சூழ்ச்சி-பிரபல சட்டத்தரணி

(கொழும்பு)
சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடையை நீக்கும் அரசின் செயற்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சர்வகட்சி ஆட்சிக்குள் கொண்டு வருவதற்கான சூழ்ச்சியாக இருக்கலாம் என சட்டத்தரணி பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.



தடை நீக்கப்பட்டுள்ள அமைப்புக்கள் வெளிநாடுகளில் விடுவிக்கப்படாத மில்லியன் கணக்கான டொலர் நிதியை வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடிய திறன் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்ய முடிந்தால் இலங்கை எதிர்நோக்கும் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு ஓரளவு நிவாரணம் கிடைக்கும் என்றும் ஆனால் அப்படி நடக்குமா என்று கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இலங்கையின் டொலர் நெருக்கடியை புலம்பெயர் தமிழர்களுக்குச் சொந்தமான பணத்தில் இருந்து தீர்க்க முடியும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மின்கட்டண அதிகரிப்பு அநியாயமானது
### ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)
பொருளாதார பிரச்சினை என்ற மரத்தில் இருந்து விழுந்தவர்கள் மின்சார சபை என்ற காளையால் இழுக்கப்படுகிறார்கள் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். மின்சார கட்டணத்தை உயர்த்தி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத ஸ்தலங்களின் மின்சார கட்டணமும் 55 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்திய சோபித தேரர் ஏனைய சாதாரண மக்களின் மின்சாரக் கட்டணமும் 30C வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட விதம் அநியாயமானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேலும் மின்கட்டண் உய ர்வை திருத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (நி)

# வெளிநாடு செல்லும் போது
# சட்டரீதியாக விசா பெறுமாறு
# பொலிஸார் கோரிக்கை விடுப்பு

(கொழும்பு)
வெளிநாடுகளுக்குச் செல்லும் போது சட்ட ரீதியாக மாத்திரம் விசா பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறில்லை எனில் ஆட்கடத்தல்காரர்களிடம் சிக்கிக் கொள்ளும் அபாயம் உள்ளதால் பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதாக மக்களின் பணத்தை பெற்று ஏமாற்றும் பல் வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் குறித்த தகவல்கள் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தநிலையில், அவர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (நி)

## வெதுப்பகங்கள் முடங்கும் அபாயம்
### நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)
அரசாங்கம் தலையிட்டு மாவு, முட்டை மற்றும் மாஜரின் ஆகியவற்றின் விலைகளைக் குறைத்தால், பாண் மற்றும் பணிஸின் விலையை ரூ. 50 மற்றும் ரூ.25 ஆல் குறைக்க முடியுமென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்படியான நிலைமையில் தமது தொழிலை தொடர முடியாத நிலைமைக்கு வந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்தார்.

"இப்போது ஒரு முட்டையின் விலை 60 ரூபாவிற்கு மேல் விற்கப்படுகிறது. ஒரு மூடை மாவு ஒவ்வொரு நாளும் சீராக ஏறிக்கொண்டிருக்கிறது. மாஜரின் சந்தை விலை அதிகரித் துள்ளது

தென்னிந்தியாவில் முட்டை ஒன்றின் விலை ரூ. 18. அரச அவற்றை இறக்குமதி செய்து ரூ. 30 இற்கு விற்க முடிந்தால் நாங்கள் பாண் மற்றும் பணிஸின் விலைகளை குறைக்க முடியும். சந்தையில் கோதுமை மாவின் விலையில் கட்டுப்பாடு இல்லை. எனவே, பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க தேவையான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# இந்தியாவின் சுதந்திர தின நிகழ்வு யாழிலும் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)
இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கொடியேற்றப்பட்டு கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக்காலை 9 மணிக்கு இந்தியாவின் தேசியக்கொடியை துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஏற்றி வைத்தார்.

இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியை துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் குடும்ப உறுப்பினர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (நி-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022

# 5 ஆவது காலிறுதிப் முன்போட்டியில் பற்றீசியன்ஸ் அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022 தொடரின் 5 ஆவது காலிறுதி முன் போட்டியில் பற்றீசியன்ஸ் அணி ஹாட்லியையிற்ஸ் அணியை 103 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணி 38.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. றதீபன்-58, கஸ்ரோ-36, லிவிங்ரன்-26 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் ஹாட்லியையிற்ஸ் அணி சார்பாக தினேஜன் 10 ஓவர்களில் 49 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் குகேஸ்வரன் 6 ஓவர்களில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிரசாத் 8.1 ஓவர்களில் 45 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் டிலக்ஸன் 9 ஓவர்களில் 48 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய ஹாட்லியையிற்ஸ் அணி 32 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

குகேஸ்வரன் 17 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்துவீச்சில் பற்றீசியன்ஸ் அணி சார்பாக கவஸ்கார் 10 ஓவர்களில் 34 ஓட்டங்களைக் கொடுத்து 03 விக்கெட்டுக்களையும் நோபேட் 1 ஓவரில் 1 ஓட்டத்தைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் தனுசியன் 7 ஓவர்களில் 10 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 13 ஆண்டுகளாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு பற்றீசியன்ஸ் அணி 8.99 புள்ளிகளையும் ஹாட்லியையிற்ஸ் அணி 1.93 புள்ளிகளையும்பெற்றுக் கொண்டன. (க)

இலங்கை கிரிக்கெட் பிரிவு III- 2022

## ஓல்ட்கோல்ஸ் அணி காலிறுதிக்கு தெரிவு




இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022 தொடரின் 6 ஆவது காலிறுதி முன்போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கிறாஸ்கொப்பர்ஸ் அணி 36.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. டிலோஸன்-82, ஜனன்தன்-25, கஜித்-23, கோகிலன்-22 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்,

பந்துவீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணி சார்பாக சிறிகுகன் 8.3 ஓவர்களில் 36 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் நிரோஸன் 8 ஓவர்களில் 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஜின்துஜன் 6 ஓவர்களில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 212 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 37.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. நிரோஸன் ஆட்டமிழக்காது 106, பிரியலக்ஸன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் கீதவர்ஸன் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி சார்பாக ஜனன்தன் 7 ஓவர்களில் 33 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 13 ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு ஓல்ட் கோல்ஸ் அணி 8.73 புள்ளிகளையும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி 2.51 புள்ளிகளையும் பெற்றுள்ளன. (க)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2688

### ஷங்கர்



ஒருவன் போதும் என்று என்னை வீச
இன்னொருவன் போதாது என்று
என்னை தேடுகிறான்
"தூக்கி வீசப்பட்ட உணவு"

### பத்மஜா

வாழ்க்கையில் பேஸ்ட்டுக்கு
அப்புறம் தான் காபி...!
ஆனால் கம்ப்யூட்டரில் ..
காபிக்கு அப்புறம் தான் பேஸ்ட்.....



### திவாகர்

வாழ்ந்து உயர்ந்து விட்டால்
'பொறாமையில்'
பேசுவார்கள்
தாழ்ந்து வீழ்ந்து விட்டால்
'கேவலமாக' பேசுவார்கள்
இவ்வளவு தான்
மனிதர்களின்
உலகம்.

### சாயிஷா

மனைவி–உலகம் பூரா தேடினாலும் என்னை மாதிரி
மனைவி கிடைக்கமாட்டா.
கணவன்– எனக்கென்ன பைத்தியமாடி புடிச்சிருக்கு
மறுபடியும் உன்னை மாதிரியே தேட



### தரன்

பழி சொல்ல
தெரிந்த யாரும்
நமக்கு வழி சொல்லப்
போவதில்லை.
நம் வாழ்க்கை
நம் கையில்.

### மதுமதி




வழியில்
கண்டெடுத்த
ஐந்து
டொலரை
விட உழைப்
பினால்
பெற்ற ஒரு
டொலரின்
மதிப்பு
அதிகம்
–ஆபிரகாம் லிங்கன்–

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பாக இடம்பெற்ற மடு அன்னையின் பெருவிழா





(மன்னார்)

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழா நேற்று திங்கட்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது.

நேற்றுக் காலை 6.15 மணி அளவில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆண்டகை, கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் பிள்ளை நாயகம் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

இந்த நிலையில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் அன்னையின் ஆசீர்வாதத்தை வேண்டி மடு திருத்தலத்திற்கு வருகை தந்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றதோடு மடு அன்னையின் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்டிருந்த கொவிட் தொற்று காரணமாக ஆலயத்திற்கு செல்ல பக்தர்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இந்த வருடம் அதிகளவான மக்கள் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்ய நடைபயணம் மேற்கொண்டு வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-285)

## இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலால் நெருக்கடி நிலையில் முல்லைத்தீவு மீனவர்கள்

(கண்டாவளை)

எமது தொழிலை சுதந்திரமாக செய்வதற்கான சூழ் நிலைகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் தற்போது இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் மற்றும் வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் தமது வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன என்றும் இதற்கு தீர்வு ஒன்றினைப் பெற்றுத்தருமாறு இப்பகுதி கடற்றொழிலாளர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முகத்துவாரம் நல்ல தண்ணித்தொடுவாய் முதல் பேய்ப் பாறைப்பிட்டி வரைக்குமான 74 கிலோமீற்றர் நீளமான கரையோரப்பகுதிகளிலும் ஆழ்கடல் பகுதிகளிலும் தமது வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ளும் வகையில் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இப் பகுதிகளில் தடைசெய்யப்பட்ட மற்றும் அனுமதிகளை மீறிய தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன் என்றும் இதனால் தமது தொழில்கள் பாதிக்கப் படுவதாகவும் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட ஏராளமான குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்கே பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலைமை காணப் படுவதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது நிபந்தனைகளை மீறிய அட்டைத்தொழில், வெளிச்சம் பாச்சி மீன்பிடித்தல், கரை வலைப்பாடுகளில் உழவு இயந்திரங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல் மற்றும் சிறுகடல் பகுதிகளில் தடைசெய்யப்பட்ட தொழில்களை மேற்கொளுதல் என்பன பெரிதும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. என்றும் கடற்றொழில்களை விடுத்து தற்போது கூலி வேலைகளுக்கே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-315)

## யானைகளை கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

சிறுபோக வயல் நிலங்களுக்குள் யானைகள் புகுந்து பயிர் அழிவுகளை ஏற்படுத்துவதால் அறுவடையினை விரைவாக மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதாக கிளிநொச்சி வன்னேரிக்குள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

1953 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் யானைகளின் தொல்லை கூடுதலாக காணப்படுகிறது.

எனவே யானைகளை கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடு க் குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.(நி-350)

## பூநகரி பிரதேசத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் பல்வேறு பகுதியில் தொடர்ந்தும் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. தமக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் இப்பகுதி மக்கள் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரி பிரதேசத்தில் உள்ள 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாழ்ந்து வரும் ஏழாயிரத்து 500இற்கும் மேற்பட்ட குடும்பங்களில் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாழும் சுமார் மூவாயிரத்து க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் குடிநீர் விநியோகிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன் ஒன்பது பாடசாலைகளுக்கும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்நிலையில் மறவன் குறிச்சி ,கொல்லக்குறிச்சி ,இராமலிங்கம் வீதி, பரமன் கிராய், கறுக்காய் தீவு, செட்டியகுறிச்சி, ஞானிமடம், சித்தங்கேணி, நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் போதிய குடிநீர் வசதிகள் கிடைப்பதில்லை என்றும் இதனால் தமக்கான குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி-315)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு-1928.02.13
உதிர்வு-2022.06.22

கடந்த 22.06.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்.கந்தையா துரைராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 15.08.2022 திங்கட்கிழமை காலை 07.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 16.08.2022 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (12444)

17/24 நாவலடி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
077 624 9436

இங்கனம்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக திருக்கூட்டத் தொடர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு தெய்வீகத் திருக்கூட்டச் சிறப்புத் தொடர் நிகழ்வின் பதினாறாம் நாள் நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்திலே, நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர், ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க, யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து. இராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய், பிரதேச செயலர் பிரிவின், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

சிறப்பு நிகழ்வுகள் வரிசையில், 'என்றும் நின்று நிலைக்கும் வழிகாட்டிய நாவலர் பெருமான்' என்னும் தலைப்பில் சைவப்புலவர், ஆசிரியர் ச.முகுந்தன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் நுண்கலைமாணி திருமதி.சித்திரா கவிக்குமார் அவர்களின் இசைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (நி)

# அரசியல் தீர்வை வலியுறுத்தி போராட்டம்




(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வினை வலியுறுத்தி இடம்பெற்று வருகின்ற 100நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் 14 ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் புங்குடுதீவு சவேரியார் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வானது மத குருக்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமானது.

அத்துடன் குறித்த நிகழ்வில் வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வினை வழங்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக வடக்கு -கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பு சார்பாக சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் பொதுமக்களுக்கு விளக்கமளித்திருந்தார். கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிவப்பு மற்றும் நீல நிறங்களில் தமது கைரேகைகளைப் பதித்து கௌரவமான அரசியல் தீர்வினைக் கோரி போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

## அதிக கட்டண அறவீடு

# மேலுமொரு வாகனப் பாதுகாப்பு நிலையம் நல்லூரில் மூடப்பட்டது

(குப்பிழான்)

யாழ்.மாநகரசபையினால் அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக அதிக கட்டணம் அறவிட்டமையால் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இயங்கி வந்த மற்றுமொரு தற்காலிக வாகனப் பாதுகாப்பு நிலையம் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்.மாநகரசபை அதிகாரிகளால் மூடப்பட்டுள்ளது.

நல்லூர் அரசடிப் பகுதியில் புதிய சிவன் வீதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வாகனப் பாதுகாப்பு நிலையமே இவ்வாறு யாழ்.மாநகரசபையால் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது. இதேவேளை, பருத்தித் துறை வீதி நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் அடியவர்களிடமிருந்து அதிக பணம் அறவிடப்படுவதாக யாழ். மாநகரசபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதையடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த வாகனப் பாதுகாப்பு நிலையம் யாழ்.மாநகரசபை அதிகாரிகளால் மூடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-18)




யாழ்.திருநெல்வேலியைத் தளமாகக் கொண்டு இயங்கும் அக்னி இளைஞர் அணியினரின் ஏற்பாட்டில் 'நோத்வே பமிலி மார்ட்' இன் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி சிவன் வீதியில் அமைந்துள்ள ஜே/110 கிராம அலுவலக மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: ரவிசாந்)

## துணுக்காயில் 50 பயனாளிகளுக்கு விதைகள் வழங்கி வைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத்தோட்டத்தில் ஆர்வமுள்ள மற்றும் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடுகின்ற 50 பயனாளிகளுக்கு விதை தானியங்கள், மரக்கன்றுகள், நாற்றுக்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் நவீனத்துவமான பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சி நெறியும் வழங்கப்பட்டுள்ளது

ஐ.எம்.எச்.ஓ. நிறுவனத்தினரின் நிதியுதவியுடன் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதேச செயலாளர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-315)

# வருடாந்த அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

தெல்லிப்பழை மகாதனை கோணாசீமா நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு விசேட அபிஷேக பூசைகளுடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்தும் 12 தினங்கள் இவ்வாலய அலங்கார உற்சவம் சிறப்பாக நடைபெறும்.

அலங்கார உற்சவத்தின் இறுதிநாளான எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 108 கலச சங்காபிஷேகம், விசேட பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மதியம் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) இடம்பெறும். அன்றையதினம் மாலை பூந்தண்டிகையில் சுவாமி வீதி வலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறும் என மேற்படி ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-18)

## மின் உற்பத்தி தொகுதி செயலிழப்பால்

# மின் வெட்டு நேரம் நீடிப்பு

(கொழும்பு)

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின்னுற்பத்தி தொகுதியொன்று செயலிழந்துள்ளதன் காரணமாக ஒரு மணித்தியாலம் 20 நிமிட மின் வெட்டு நீடிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதேவேளை மின்னுற்பத்தி தொகுதியை சீரமைக்க குறைந்தது 14 முதல் 16 நாட்கள் ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 440 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 600 |
| தக்காளி | 400 | 360 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 240 |
| கோவா | 340 | 380 | 400 |
| கரட் | 320 | 360 | 450 |
| பூசணி | 130 | 120 | 120 |
| புடோல் | 120 | 80 | 200 |
| வாழைக்காய் | 160 | 160 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 160 |
| பாகற்காய் | 450 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 220 | 240 |
| பயற்றங்காய் | 400 | 320 | 200 |
| லீக்ஸ் | 350 | 250 | 350 |
| பீற்றூட் | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 450 | 400 |
| போஞ்சி | 600 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 400 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 120 |
| தேசிக்காய் | 250 | 150 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 400 |
| முள்ளங்கி | 140 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 60 | 90 | 50 |
| வல்லாரை | 20 | 100 | 40 |
| ஈரப்பலா | 120 | 80 | 140 |

# இளவாலையில் இலவச மருத்துவ முகாம்



(குப்பிழான்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் காலஞ்சென்ற மருத்துவர் சி.மோகனின் நினைவாக அவரது குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட இலவச மருத்துவ முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இளவாலை ஆதார மருத்துவமனையில் இடம்பெற்றது. தொற்றாத நோய்களை ஆரம்பத்தில் கண்டறியும் நோக்குடன் இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (நி-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்க பா.ஜ.க.தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்

## இராமேஸ்வரத்தில் வைத்து அண்ணாமலை உறுதி

**(சென்னை)**

**இலங்கை கடற்படையினரின் அச்சுறுத்தலின்றி தமிழக கடற்றொழிலாளர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக கச்சத்தீவை இலங்கையிடம் இருந்து மீட்க மத்திய அரசாங்கத்திற்கு, தமிழக பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.**



இராமேஸ்வரத்தில் வைத்து நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த 1972 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டு, அது தீர்க்கப்பட்ட விவகாரம் என்று கூறப்பட்டது.

எனினும் அதனை மீட்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் கடற்றொழிலாளர்களின் நலன் காக்க தீவிரம் காட்டி வருகின்றது. எனவே, தமிழக பா.ஜ.க. பிரிவு இந்த விவகாரத்தில் மத்திய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்.

2014 ஆம் ஆண்டில் நரேந்திர மோடி பதவியேற்ற பிறகு, இலங்கைக் கடற்படையினரால் கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. கைது செய்யப்பட்டாலும் மத்திய அரசாங்கம் தலையிட்டு அவர்களை பத்திரமாக அழைத்து வந்தது.

எனவே, கச்சத்தீவை மீட்பது தான் அமைதியாக மீன்பிடிக்கான ஒரே வழி. அதை பா.ஜ.க. மேற்கொள்ளும்" என அவர் தெரிவித்தார். (நி)

# சிங்கப்பூரில் ஹோட்டல் கட்டணமாக 67 மில்லியன் ரூபாய் செலுத்திய கோட்டா

(சிங்கப்பூர்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் தங்கியிருந்த காலப்பகுதியில் 67 மில்லியன் ரூபாவை ஹோட்டல் கட்டணமாக செலுத்தியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் கடந்த 11 ஆம் திகதி தாய்லாந்து செல்லும் வரை சிங்கப்பூரில் உள்ள மரினா பே சாண்ட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்தனர்.

ஹோட்டலின் தங்குமிட கட்டணமாக செலவிடப்பட்ட 67 மில்லியன் ரூபாவை அவன்ட் கார்ட் நிறுவனத்தின் உரிமையாளர் நிஷ்ஷங்க சேனாதிபதி செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை எவ்வாறாயினும், தற்போது தாய்லாந்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி, அந்நாட்டிலுள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதற்கு தாய்லாந்து அரசாங்கத்திடம் அனுமதி கோரிய போதிலும், இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தங்கியிருக்கும் ஹோட்டல் வளாகத்தை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என தாய்லாந்து அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளதாக தாய்லாந்தின் பேங்காக் போஸ்ட் செய்தித்தாள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கத்திற்கு குணதாச அமரசேகர எதிர்ப்பு

(கொழும்பு)

பல புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டமைக்கான காரணத்தை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என கலாநிதி. குணதாச அமரசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ள தருணம் எங்களிற்கு கவலையளிக்கின்றது என அவர் தேசிய அமைப்புகளின் சம்மேளனங்களின் சார்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளை அடிப்படையாக வைத்து இவ்வாறான நடவடிக்கைகளை நியாயப்படுத்த முடியாது என கலாநிதி. குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கம் கொண்ட நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது என குறிப்பிட்டுள்ள அவர் சில புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் மீதான தடையை நீக்குவதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறை குறித்து வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் ஜனாதிபதியை சந்தித்த பின்னர் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் தங்களுடைய வேண்டுகோள்கள் தொடர்பில் பல வாக்குறுதிகள் கிடைத்துள்ளன என தெரிவித்திருந்தார்.

தடை நீக்கமும் அந்த வாக்குறுதிகளில் ஒன்றா என குணதாச அமரசேகர கேள்வி எழுப்பியுள்ளார். (நி)

# 21 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் நாட்டை வந்தடையும்

(கொழும்பு)

இந்திய கடன் உதவியின் கீழ் மேலும் 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா இந்த வாரத்திற்குள் இலங்கையினை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மக்காச்சோளச் செய்கை காக இந்த உரத்தின் ஒரு பகுதி பிரித்து வழங்கப்படவுள்ளதாக கொழும்பு கமர்ஷல் உர நிறு வனத்தின் பணிப்பாளர் மெத்சிறி குணவாதன தெரிவித்தார். (நி)

# அவசரகாலச் சட்டம் ரத்தாகும் நிலையில்

(கொழும்பு)

இம்மாதம் 27 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள அவசரகாலச் சட்டம் இனி நீடிக்கப்படாது என்ற நிலைமை காணப்படுகின்றது.


கடந்த மாதம் 27ஆம் திகதி பாராளுமன்றில் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நிலையில் தற்போது பாராளுமன்றம் 29 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஒகஸ்ட் 27 ஆம் திகதியுடன் நிறைவடையும் குறித்த சட்டத்தை நீடிக்க வேண்டுமெனில் மீண்டும் பாராளுமன்றின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியமாகும். ஆனால் தற்போது 27 ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டுவதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

எனவே, ஒகஸ்ட் 27 ஆம் திகதிக்கு பிறகு இந்தச் சட்டம் தானாக இரத்தாகும் நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தியாவின் கடல்சார் கண்காணிப்பு விமானம் நேற்று நாட்டை வந்தடைந்தது





(கொழும்பு)

இலங்கை கடற்படையினருக்கு நன்கொடையாக வழங்கப்படவிருந்த இந்திய கடற்படைக்கு சொந்தமான டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானம் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தை வந்தடைந்தது.

இந்திய சுதந்திரதினமான நேற்று குறித்த விமானம் இலங்கை கடற்படையினருக்கு கையளிக்கப்பட்டது.

இதேவேளை தரையிறங்கிய விமானத்தை நீர் பீச்சியடித்து வரவேற்றனர்.

இதில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## இரு கேள்விகள்

(நேற்றைய தொடர்ச்சி)

அதன் பிறகு அவன் தன் மந்திரியை கலந்து ஆலோசித்து பிரம்ம ராட்சஸியின் கேள்விகளுக்கு பதில் கூறி அதனை ஒழித்துவிட்டு வருபவனுக்குத் தன் நாட்டில் ஒரு பகுதியைக் கொடுப்பதாக நாடெங்கிலும் பறை சாற்றிவித்தான். அப்படியும் யாரும் பிரம்மராட்சஸியை ஒழிக்க முன் வரவில்லை. தம் உயிர் போய் விடுமே என்று யாவரும் பயந்ததே இதற்கு காரணம். இப்படியே நாட்கள் கழிந்து கொண்டிருந்தன.

ஒருநாள் கனகரத்தினம் என்ற வாலிபன் மன்னனைக் கண்டு தான் பிரம்ம ராட்சஸியைக் கொன்று வருவதாகக் கூறினான். மன்னனும் "அது கேட்கும் கேள்விகள் என்ன என்று தெரியாது. அது வலிமை மிக்கது. உன்னைப் பார்த்தால் சாதாரண கிராம வாசியாகத் தோன்றுகிறாய். நீ வீரனா? ஏதாவது போரில் மகத்தான செயல்கள் புரிந்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

கனகரத்தினமும் "அரசே! நான் போர் வீரனல்ல. வயலில் வேலை செய்து பிழைப்பவன்" என்றான். அது கேட்டு கனகவர்மன் பலமாகச் சிரித்து "ஓ! நீ ஒரு சிறுநாடு கிடைக்கப் போகிறதே என்று ஆசைப்பட்டு பிரம்ம ராட்சஸியைக் காண போகிறாயா? இது வீண் முயற்சி. உன் உயிர் தான் போகும்" என்றான்.



கனகரத்தினமும் "அப்படிப்பட்ட ஆசை எனக்கு இல்லை. அரசே! நான் மலைச்சாதியினருக்கு உதவவே அந்த பிரம்மராட்சஸியை எதிர்க்க முன் வந்துள்ளேன். என்னுடன் எங்கள் ஊரிலுள்ள பெரும் பண்டிதரான ஞானசேகரரையும் என் கூட அழைத்துச் செல்லப் போகிறேன். என்னால் மலைவாசிகளுக்கு நன்மை ஏற்படும் என்றால் அதற்காக என் உயிரையும் கொடுக்கத் தயார்" என்றான்.

கனகரத்தினம் இவ்வாறு கூறியது கேட்டுக் கனகவர்மன் அவனது துணிச்சலையும் நல்லெண்ணத்தையும் கண்டு வியந்தான். அவனைச் சாதாரணமாகக் கருதாமல் பெருமதிப்பு அளித்து பிரம்மராட்சஸியை வென்று வர அனுமதியும் அளித்தான். கனகரத்தினமும் மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனைக்கு வெளியே வந்து அங்கு காத்து நின்ற ஞானசேகரரிடம் மன்னனின் அனுமதி கிடைத்ததைக் கூறி அவரை அழைத்துக் கொண்டு காட்டை நோக்கிச் சென்றான்.

அவர்களுக்கு வழி காட்ட சில வீரர்களை மன்னன் அனுப்பினான். அவர்கள் கனகரத்தினத்தையும் ஞானசேகரரையும் காட்டில் கொண்டு போய் விட்டார்கள்.

அடர்ந்து உயர்ந்து வளர்ந்த மரங்களைக் கண்ட ஞானசேகரர் பயந்து "ரத்தினம்! இனி நான் வரமாட்டேன். இங்கேயே இருக்கிறேன். நீ போய் பிரம்ம ராட்சஸியைப் பார்த்து விட்டு வா" என்று கூறி ஓரிடத்தில் உட்கார்ந்து விட்டார்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கனாக் கண்டேனடி தோழி

அப்படி போகும் போதுதான் அவள் எதிரே கண்ணகியைப் பார்த்தாள்.

பிரிவுத் துயரில் இருக்கும் கண்ணகியைப் பார்த்ததும் தேவந்தி தன் கவலையை மறந்தாள். பாசாண்டச் சாத்தனிடம் கண்ணகியின் கணவனை அவளுடன் சேர்க்குமாறு மனமுருகி வேண்டினாள்.

"திக்கற்றவர்களுக்கு கேட்டதைக் கேட்டபடி செய்யும் தெய்வம் இது. உன் கணவன் நிச்சயம் திரும்பி வருவான்" என்று கண்ணகிக்கு ஆறுதல் சொன்னாள்



அவள். உன் போன்ற நல்ல உள்ளங்களின் ஆசியில் அது நிச்சயம் நடக்கும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஆனால் நான் கண்ட கனவுதான் கவலை அளிக்கிறது.

"என்ன அது கனவு?"

"நானும் என் கணவரும் ஏதோ ஒரு புது நகருக்குப் போகிறோம்.

அங்கே யாரோ அவர் மேல் பொய்யான பழியைச் சுமத்துகிறார்கள்.

நான் நியாயம் கேட்க அரசனிடம் போகும் போது அரசனுக்கும் அந்த ஊருக்கும் தீங்கு நேர்கிறது."

"பாசாண்டச் சாத்தனை வேண்டிக் கொள். எந்தத் தீங்கும் வராது. கண்ணகி கடவுளை வேண்டி நின்றாள்.

அப்போது எங்கிருந்தோ ஒரு பணிப்பெண் ஓடி வந்தாள்.

அம்மா, நம் வீட்டு வாயிலில் வாடிய முகத்துடன் ஒரு வசீகரமான மனிதர் வந்து நின்று கொண்டிருக்கிறார்" என்றாள்.

அப்படியா? யார் அவர்?

தெரியவில்லை அம்மா. ஆனால், பார்ப்பதற்கு அவர் ஓவியத்தில் இருக்கும் நம் கோவலனைப் போலவே இருக்கிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்!.

– தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பிரதேச அபிவிருத்தியை உதாசீனம் செய்யாதீர்கள்

திட்டமிடல் என்பது மிகவும் முக்கியமான விடயம். எனினும் எங்கள் தமிழர் தாயகத்தில் திட்டமிடல் என்பது வேண்டப்படாத விடயமாகவுள்ளது.

இங்குதான் நம் தமிழ் இனம் மிகப்பெரிய தவறை இழைக்கின்றது.

இதற்குப் பல உதாரணங்களைக் குறிப்பிட முடியும். வீதி அமைத்தல், புகையிரதப் பாதை அமைத்தல், வடிகால் கட்டுதல், பாலம் நிர்மாணித்தல் என எதிலும் திட்டமிடல்கள் இல்லாத காரணத்தால் அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டுமானங்கள் கிடைக்கப் பெற்றும் அவை உபத்திரவமாக மாறிற்று.

எடுத்துக் காட்டாக வடபுலத்தில் புதிதாக அமைக்கப்புட்ட புகையிரதப் பாதையை கண்டபாட்டில் உயர்த்திவிட, இன்று பல வீடுகள் மழை காலத்தில் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளன.

இதேவேளை மழைநீர் வடிந்தோடுவதற்கு இயற்கையாக இருந்த நீரோட்டத்தை மதில்கள் அமைத்துத் தடுத்துவிட, மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து மிகப்பெரும் இடைஞ்சலை ஏற்படுத்துகின்றது.

ஆக, காணிகளுக்கு சுற்றுமதில் அமைக்கும்போது, வெள்ள நீர் வடிந்தோடுவதற்குரிய ஏற்பாடுகள் கட்டாயப்படுத்தப்பட்டிருக்குமாயின் மேற்போந்த பிரச்சினையைச் சுலபமாகத் தடுத்திருக்க முடியும்.

இவ்வாறாக திட்டமிடல் இல்லாத பல்வேறு வேலைத்திட்டங்களை இங்கு உதாரணப்படுத்தலாம்.

இவை ஒருபுறமிருக்க, உயர்கல்விக்கான கட்டுமானங்கள், தொழிற்சாலை நிர்மானங்கள், விளையாட்டு மைதான அமைப்புகள் என்பன தொடர்பில், பரந்த அபிவிருத்தி நோக்கும் இருக்கக்கூடிய வளங்களை முழுமையாகப் பயன்படுத்துகின்ற இலக்கும் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்குகின்ற திட்டமிடலும் இருக்க வேண்டும்.

ஆனால் வடபுலத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாண நகரை அண்மித்ததாக அனைத்து வேலைத்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

இதனால் தீவகம், வடமராட்சி, வலிகாமம் கிழக்கு, வடக்கு, மேற்கு மற்றும் தென்மராட்சி உள்ளிட்ட யாழ்.மாவட்டப் பிரதேசங்கள் எந்த வித முன்னேற்றமுமின்றி இருண்டு கிடக்கின்றன.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, உயர்தொழில்நுட்ப நிறுவகம், தொழில்நுட்பக் கல்லூரி என அனைத்தும் யாழ்ப்பாணத்தில் குவிந்து கிடக்கின்றன.

உண்மையில் தேசிய கல்வியியல் கல்லூரியை தீவகத்திலும் உயர்தொழில்நுட்ப நிறுவனத்தை வடமராட்சியிலும் தொழில்நுட்பக் கல்லூரியை வலிகாமத்திலும் அமைத்திருந்தால் பிரதேச எழுச்சியும் வளர்ச்சியும் தானாக ஏற்பட்டிருக்கும்.

அந்தவகையில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை மண்டைதீவில் அமைப்பதாக திட்டமிட்டிருந்தபோதிலும் இப்போது அதனை கோண்டாவிலில் அமைப்பது என பிரஸ்தாபிக்கப்படுகிறது.

உண்மையில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு மண்டைதீவு பொருத்தமான இடமெனத் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதிலும் அதற்கு இடையில் ஏற்பட்ட தடை என்ன என்பது தெரியாமல் உள்ளது.

எதுவாயினும் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு கோண்டாவில் பொருத்தமா? என்பதை துறைசார் நிபுணர்கள் கூடியிருந்து ஆராய்வது மிக மிக அவசியம்.

# புலம்பெயர் அமைப்புக்களின் தடை நீக்கத்தை நல்லெண்ண சமிக்ஞையாக பயன்படுத்த வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் இந்த தீர்மானத்தினை நல்லெண்ணச் சமிக்ஞையாக புலம்பெயர் உறவுகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவினை எந்தவித்மான சஞ்சலமும் இன்றி துணிச்சலாக வெளிப்படுத்திய ஈ.பி.டி.பி. கட்சி, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் சுமார் 10 அம்சக் கோரிக்கையை முன்வைத்திருந்தது.

அதில் ஒன்றாக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை நீக்கப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தடை நீக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தினை புலம்பெயர் உறவுகள் சரியான சந்தர்ப்பமாக பயன்படுத்தி, நாட்டில் வாழ்ந்து வருகின்ற தங்களுடைய உறவுகளின் பொருளாதார பலத்தை கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஏனைய கோரிக்கைகளும் முன்னுரிமை அடிப்படையிலாயினும் நிறைவேற்றப்படுவதுடன், தடைசெய்யப்பட்டுள்ள முஸ்லிம் அமைப்புக்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## இந்த வருடம் முதல் 4 மாதங்களில்

# காட்டு யானை தாக்கியதில் 34 பேர் மரணித்துள்ளனர்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் காட்டு யானைகள் தாக்கி 34 பேர் மரணித்துள்ளனர் என்று விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் 47 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளன என்றும் அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8 மாகாணங்கள் மற்றும் 19 மாவட்டங்களில் உள்ள 131 பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை மற்றும் மனித மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த ஆண்டில் உயிரிழந்த 47 காட்டு யானைகளில், 13 யானைகள் துப்பாக்கிச்சூடு காரணமாகவும், மேலும் 17 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கியும் மரணித்துள்ளன.

கடந்த 3 வருடங்களில் யானை - மனித மோதல்கள் அதிகரித்து வருகின்றன. 2019ஆம் ஆண்டில் 407 யானைகள் உயிரிழந்துள்ளதுடன் 122 பேர் உயிரிழந்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டில், யானை - மனித மோதலால் 112 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் கடந்த வருடத்தில் யானை - மனித மோதலால் 142 பேர் உயிரிழந்ததுள்ளனர் எனவும் விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் - மிகிந்தலைப்பகுதியில் மின்சாரம் தாக்கி நேற்று முன்தினம் மூன்று யானைகள் பலியாகின.

புதுக்குளம் பிரதேசத்தில் உள்ள தனியார் காணியொன்றின் உரிமையாளரால் சட்டவிரோத மின்சார வேலி ஒன்று அமைக்கப்பட்டிருந்த நிலையில், அதில் மோதி குறித்த யானைகள் உயிரிழந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# 9,200 லீற்றர் பெற்றோலுடன் 4 சந்தேகநபர்கள் கைது

(கொழும்பு)

9,200 லீற்றர் பெற்றோலுடன் நான்கு சந்தேகநபர்கள் ஆனமடுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பவுசரில் இருந்து பெற்றோலை லொறியில் ஏற்றிச் செல்ல முற்பட்ட போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, குறித்த பெற்றோல் மண்ணெண்ணெய்க்கு பதிலாக மன்னார் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்துள்ளது. (ம-7)

# மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட மணல், மண், கண்டாவளை மணல், கிரவல் மற்றும் கற்கல் நாளை 17.08.2022 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றையதினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வருகை தர வேண்டும் என மல்லாக நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-7)

## நுவரெலியாவில்

# இளைஞன் ஒருவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

நுவரெலியாவில்காணாமல்போன இளைஞர் ஒருவர் 12 நாட்களின் பின்னர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா, பம்பரக்கலை தோட்டத்தில் வசிக்கும் 20 வயதுடைய சுந்தரலிங்கம் சசிதரன் என்ற இளைஞர் கடந்த 3ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார். இந்நிலையில், நேற்று காலை நுவரெலியா சமுர்த்தி வங்கிக்கு அருகாமையில் உள்ள ஓடையில் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞரைக் காணவில்லை என்று அவரின் பெற்றோர் பொலிஸில் [illegible]

இந்த முறைப்பாட்டில், கடந்த 3ஆம் திகதி வீட்டுக்கு விறகு தேடி வருவதாகக் கூறிவிட்டுச் சென்ற இளைஞர், அதன்பிறகு வீடு திரும்பவில்லை எனவும், விறகு தேடிச் சென்ற பகுதியில் ஆற்றைக்கடக்க முற்பட்டபோது, கால் தவறி ஆற்றில் விழுந்து நீரில் அடித்துச் செல்லப்பட்ட காட்சி அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. காட்சியின் மூலம் உறுதிசெய்யப்பட்டிருந்தது எனவும் தெரிவித்திருந்தனர்.

குறித்த இளைஞர் நுவரெலியா சமுர்த்தி வங்கிக்கு அருகாமையில் [illegible] ஒன்றில் [illegible] சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7)

# கெஹலிய வீட்டுக்கு தீ வைத்த சம்பவம்

## மூன்று பேர் கைது

(கொழும்பு)

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற பதற்ற நிலைமையின் போது கண்டியில் உள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் இல்லத்திற்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் போதே இவ்வாறு மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 25, 29 மற்றும் 32 வயதுகளையுடையவர்களே என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 52

ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பு (OSCE) பார்வையாளர்கள், இரண் டாம் சுற்று வாக்கெடுப்பு "சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யவில்லை" என்றும், அமெரிக்க மூத்த தேர்தல் பார்வையாளர், செனட்டர் ரிச்சர்ட் லுகர், இந்த தேர்தல் நாள் மோசடிக்கான ஒருங்கிணைந்த மற்றும் வலிமையான திட்டம் என்றும் கூறினார்.



ஆரஞ்சு புரட்சி (Orange Revolution)

புடின் யானுகோவிச்சை இது ஒரு "உறுதிப்படுத்தும்" வெற்றி என்று பாராட்டினார். தேர்தல் முடிவுகள் யுஷ்செங்கோ மற்றும் அவரது ஆதரவாளர்களால் சவால் செய்யப்பட்டன, பல சர்வதேச பார்வையாளர்கள் தேர்தலில் மோசடி செய்யப்பட்டதாகக் குறை கூறினார்கள். யுஷ்செங்கோ ஒரு தேசிய வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார்.

அடுத்தடுத்த நிகழ்வுகள் உக்ரைனில் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்தது.

பரவலான அமைதியான எதிர்ப்பாளர்களுடன் இரண்டாவது சுற்று தேர்தலுக்கு மீண்டும் அழைப்பு-விடுத்து புரட்சி ஒன்று நடந்தது. அப் புரட்சிக்கு "ஆரஞ்சு புரட்சி" ("Orange Revolution") என்று பெயரிடப்பட்டது.

விக்டர் யுஷ்செங்கோவின் பதாகைகளின் (banners) நிறம் ஆரஞ்சு நிறத்தில் இருந்ததால் "ஆரஞ்சு புரட்சி" என்ற பெயர் வந்தது. செம்மஞ்சள் நாடாக்கள் (orange ribbons) மற்றும் செம்மஞ்சள் கொடிகள் யுஷ்செங்கோவின் ஆதரவாளர்களின் தனித்துவமான அடையாளமாக பயன்படுத்தப்பட்டன. ஆரஞ்சு புரட்சியின் அடையாளமாகவும் மாறியுள்ளது. விக்டர் யானுகோவிச்சின் ஆதரவாளர்கள் நீலம் அல்லது நீலம் மற்றும் வெள்ளை பதாகைகளை வைத்திருந்தனர்.

ஆரம்பத்தில் கிட்டத்தட்ட 100,000 எதிர்ப்பாளர்கள் கீவ்வின் சுதந்திர சதுக்கத்தில் கூடினர். லிவ்விலும் (Lviv) இதேபோன்ற எண்ணிக்கையிலான மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர். அவர்கள் நேர்மையான வாக்கு எண்ணிக்கையை கோரி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். யுஷ்செங்கோ ஒரு ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று அப்போதைய ஜனாதிபதி குச்மா கூறினார். கீவில் ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தாண்டியது. நாட்கள் கழித்து நெதர்லாந்து பிரதம மந்திரி குச்மாவின் முடிவு ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் கூறினார்.

**நவம்பர் 27-29:** பல்லாயிரக் கணக்கான யானுகோவிச் ஆதரவாளர்கள் தோனேஸ்கில் கூடி யுஷ்செங்கோ வெற்றி பெற்றால் தாங்கள் சுயாட்சியை நாடுவோம் என்று மிரட்டினர். அதில் சிலர் முற்றிலும் பிரிவினைக்கு அழைப்பு விடுத்தனர். யானுகோவிச் சார்பு அரசியல்வாதிகள் சிவெரோடோனெட்ஸ்க் நகரில் கூடி யுஷ்செங்கோ ஆதரவு ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குமாறு குச்மாவுக்கு அழைப்பு விடுத்தனர். உக்ரைன் முழுவதும் கீவ்வில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களைக் கலைப்பதற்கு ஓர் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படப் போகிறது என்று பரபரப்பாக இருந்தது. துருப்புக்கள் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் கீவில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

**நவம்பர் 30:** வெளிநாட்டு அரசாங்கங்கள் உக்ரைன் நெருக்கடியில் ஈடுபடக்கூடாது என்று புடின் எச்சரித்தார். பாராளுமன்றம் யானுகோவிச்சின் பிரதமர் பதவிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாக்கெடுப்பு மூலம் நிராகரித்தது.

**டிசெம்பர் 2:** அன்று, உச்ச நீதிமன்றம் மீண்டும் இரண்டாம் சுற்று வாக்குப்பதிவுக்கு ஆதரவாக தீர்ப்பளிப்பதற்கு ஒரு நாள் முன்பு, ஜனாதிபதி குச்மா ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் நெருக்கடி பற்றி விவாதிக்க மொஸ்கோவிற்கு விஜயம் செய்தார். இரண்டாவது சுற்று மீண்டும் நடக்காமல், முற்றிலும் புதிய தேர்தல்களை விரும்பும் குச்மாவின் நிலைப்பாட்டை புடின் ஆதரித்தார்.


(தொடரும்)

# தேவாலயத்தில் தீ விபத்து 41 பேர் உடல் கருகிப் பலி

(கெய்ரோ)

எகிப்து தலைநகர் கெய்ரோவில், தேவாலயத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சிக்கி 41 பேர் உயிரிழந்தமை அப்பகுதி மக்களிடையே பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை திடீரென மின் கசிவு ஏற்பட்டதால் தேவாலயம் தீப்பற்றி எரிந்தது.இந்த தீ விபத்தில் சிக்கியே பிரார்த்தனையில் பங்கு பற்றிய மக்கள் கருகி மாண்டனர்.சம்பவத்தின் போது சுமார் 5,000 மக்கள் ஆராதனையில் ஈடுபட்டிருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இச்சம்பவத்தில் 45 பேர் காயங்களுடன் தப்பியுள்ளதாகவும் அவர்கள் காஸா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுதாவும் தெரிவிக்கப்படுகின்றது.



(நி)

# இராசிபலன்

16.08.2022
ஆடி 31, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி பின்னிரவு 1.15 மணிவரை

ரேவதி பின்னிரவு 2.32 மணிவரை
சுப நேரம் -10.35-12.05 மணிவரை
இராகு காலம் -3.05-4.35 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்-
பூரம்

வளவன்



மேஷம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்,சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.



ரிஷபம்

குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



மிதுனம்

மன நிறைவு கூடும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர் கள், காரிய அனுகூலமுண்டு,பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.



கடகம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், புதிய திட்டங்களில் முன்னேற்றமுண்டு,தந்தை வழி உறவில் உதவியுண்டு.



சிம்மம்

தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.



கன்னி

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



துலாம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



விருச்சிகம்

புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர்களின் வருகையுண்டு.



தனுசு

செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வாகன சுகமுண்டு.



மகரம்

உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும் வாய்ப்புண்டு, போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர்.



கும்பம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்,செல்வநிலை உயரும் நாள், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.



மீனம்

வழிபாடு ஆனந்தம் தரும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் இதயத்தின் மையத்தை நோக்கி எப்போதும் பயணம் செய்து கொண்டே இரு.

## +3 மரணம்...

டில் பதிவான மொத்த கோவிட் இறப்புக்களின் எண்ணிக்கை 16,624 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 129 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 668,141ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## முதியவர்...

டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த தம்பையா கந்தசாமி (வயது 65) என்ற 05 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பளை இத்தாவில் பகுதியில் தனது மகளுடன் குறித்த முதியவர் வசித்து வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று தனது தந்தயை வீட்டில் விட்டு விட்டு உறவினர் வீட்டிற்கு வவுனியா சென்று நேற்று வீடு திரும்பிய நிலையிலேயே குறித்த சடலத்தை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பில் உடனடியாக பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 3 மணி நேரம்...

பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள பழுது காரணமாகவே குறித்த மின்வெட்டு அமுலாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, A,B,C,D,E,F,G,H,I,J,K,L,P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளில், காலையில் 1 மணித்தியாலமும் 40 நிமிடங்களும், இரவில் 1 மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுதவிர, M,N,O,X,Y,Z ஆகிய வலயங்களில் அதிகாலை 5.30 மணிமுதல் காலை 8.30 மணிவரையான காலப்பகுதியில் 3 மணித்தியாலங்கள் மின் துண்டிக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## தையலகத்தில்...

அணிந்த நபர்கள் தையலகத்தை அடித்து உடைத்ததுடன் அதன் உரிமையாளரை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை இரவு 7:45 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின்சாரம் தடைப்பட்டதை சாதகமாக பயன்படுத்தி மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த நபர்கள் தையலகத்தை அடித்து உடைத்ததுடன் அதன் உரிமையாளரான பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த சந்திரகுமரன் பாலகுமார் (வயது- 44) என்பவரை வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதில் காயமடைந்த தையலக உரிமையாளர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தையலக உரிமையாளருக்கும் வேறு நபருக்கும் இடையில் உள்ள காணி பிரச்சினை காரணமாக ஒரு மாதத்திற்கு முன்னர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

அது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் பாதிக்கப்பட்டவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறையிட்டதைத் தொடர்ந்தே இவ் வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

## அனைத்து...

ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர், பிரதமர் நரேந்திர மோடியின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ் எந்த வகையான சூழ்நிலையையும் திறம்பட கையாள இந்தியா தயாராகவே உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்கை...

இன்று முதல் எதிர்வரும் 07 நாட்களுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தில் குறித்த கப்பல் நங்கூரமிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பல் வருவதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கியிருந்த நிலையிலும், கப்பலின் வருகையை தாமதிக்குமாறும் இலங்கை அதிகாரிகள் சீனாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த கப்பல் இன்றைய தினம் இலங்கை வந்தடையவுள்ளது.

சீனக்கப்பல் வருகைக்கு இந்தியா கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில் இராஜதந்திர ரீதியில் இது பாரிய பேசுபொருள் விடயமாக மாறியுள்ளது. (ம-7)

## எரிபொருள்...

படி, ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருள் விலை திருத்தம் இடம்பெறும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு முன்னதாக அறிவித்தது.

அதற்கமைய, கடந்த முதலாம் திகதி, எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டது.

அதன்போது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) லங்கா ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலையை மாத்திரம் 10 ரூபாயினால் குறைத்து புதிய சில்லறை விலையை 430 ரூபாயாக நிர்ணயித்தது.

எனினும், பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும்சுப்பர் டீசல் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

இதன்படி, 92 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் சில்லறை விலை 450 ரூபாயாகவும், 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 540 ரூபாயாகவும், லங்கா சுப்பர் டீசல் விலை 510 ரூபாயாகவும், மண்ணெண்ணெய் 87 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (ம-7)

## ஒரு...

இந்தியாவினால் இலங்கைக்கு டோர்னியர் 228 உளவு விமானம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவும் இலங்கையும் பல பொதுவான அம்சங்களைப் பகிர்ந்து கொள்வதோடு, இரு நாடுகளும் அதனைக் கட்டியெழுப்ப வேண்டியிருப்பதால், இரு நாடுகளும்தமது உறவை மேலும் வலுப்படுத்த அர்ப்பணிப்புடன்செயற்படவேண்டுமென ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

மேலும் அங்கு உரையாற்றிய ரணில்,

“நாம் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்று நான் எப்போதும் கூறிவந்தேன். ஒரு முகம் ஒருவழியாக விழுவதற்கும், மறு முகம் மறுபக்கம் விழுவதற்கும் காசைப் பிரிப்பது சாத்தியமில்லை. எதுவாக இருந்தாலும், சரித்திரம் எம்மை ஒன்று சேர்த்திருக்கிறது. நாம் ஒன்றாக இருக்க வேண்டும். இந்த உறவு என்ன? எனக்கு அதற்கு ஒரு வார்த்தை கிடைக்கவில்லை, ஆனால் நான் வரக்கூடிய மிக நெருக்கமான விடயம் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுவாழ்வு உறவு. நாங்கள் இருவரும் எங்கள் 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறோம். நமது உறவுகளை மேலும்வலுப்படுத்தநம்மை அர்ப்பணிப்போம் என்று நான் கூறுகிறேன்." என்றார். (ம-7)

## இலங்கையுடன்...

கையில்,

இந்திய சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவினை இன்றைய தினம் (நேற்று) இந்தியா கொண்டாடும் நிலையில், இலங்கையிலுள்ள எமது சகோதர சகோதரிகளுக்கு நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இதேவேளை, இலங்கையும் தனது சுதந்திரத்தின் 75ஆம் ஆண்டினை எட்டியுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உந்து சக்தியை வழங்கும் வினைத்திறன் மிக்க ஒரு பங்காளியாக இந்தியா உள்ளது.

இன்று நாம் துரிதமாக முன்னேறி வரும் நிலையில் எதிர்கால சந்ததிக்காக இப்புராதனமான உறவினை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/08/15
சீட்டிழுப்பு இலக்கம் 4848
C 4 8 9 2 5 8

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.08.15
சீட்டிழுப்பு இலக்கம் 157
மேஷம் 08 43 44 55 மேஷம்

மெகா பவர்
திகதி 15/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1196
M 11 31 32 60 79

கொவிசெத
திகதி 2022.08.15
சீட்டிழுப்பு இலக்கம் 3090
S 04 29 55 56

தன நிதானய
திகதி - 2022.08.15
சீட்டிழுப்பு இலக்கம் - 878
M 11 57 70 75

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1307
கும்பம் 5 7 5 8 8 7

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1649
ரூ. 4,180,560/-
06 10 72 75 H

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.08.15
சீட்டிழுப்பு இல: 3984
ரூ. 3,078,520/-
23 34 49 66 R

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,753,297.80
திகதி 2022-08-15
வெற்றி வாரம் 3535
01 19 49 52
வர்ணம் மஞ்சள்
ரூ. 6,976,660/-

P 35 05 11 24 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 253,777,375/-
2022.08.15 திங்கட்கிழமை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1844
சீட்டிழுப்பு திகதி 2022-08-15
33 41 43 70 F
ரூ. 34,625,860/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1823
சீட்டிழுப்பு திகதி 2022.08.15 திங்கட்கிழமை
Z 13 28 47 50
ரூ. 2,182,740/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புகளை சந்தித்துப் பேசுவதற்கு தயார்

## மனோ எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

புலம்பெயர் அமைப்புகளை சந்தித்து பேச நான் தயார். அதற்கான அடிப்படையை அரசு உருவாக்க வேண்டும். குறைந்தபட்ச பொது கோட்பாடுகளுக்கான உத்தரவாதங்களை இலங்கை அரசும், எதிர்க்கட்சிகளும் அறிவிக்குமானால் இது சாத்தியப்படலாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ரணில் நிர்வாகம், உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் திராவிட ஈழமக்கள் சம்மேளனம் ஆகிய ஆறு அமைப்புக்கள் மீதான தடையும், 316 தனிநபர்களுக்குமான தடையும் நீக்கியுள்ளது.

இந்நடவடிக்கையை நான் வரவேற்கிறேன். ஆனால், தடை நீக்கம் மாத்திரம் அவர்களை திருப்திப் படுத்த போவதில்லை.

இலங்கையின் 52 பில்லியன் டொலர் கடன் சுமை, நாட்டை நடத்த மாதாந்த 500 மில்லியன் டொலர் தேவை ஆகிய வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்துள்ள அனைத்து தமிழ், சிங்கள மக்களின் ஒத்துழைப்புக்களை நாம் நாட வேண்டும். இதற்காக காலதாமதம் செய்யாமல், இந்நாட்டின் தேசிய ஐக்கியம் மற்றும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலும், ஊழலற்ற நிதி நிர்வாகம் தொடர்பிலும் ஒரு குறைந்தபட்ச பொது கோட்பாடுகளை இலங்கை அரசு புலம்பெயர் இலங்கையர்களை நோக்கி அரசாங்கத்தின் உத்தரவாதமாக அறிவிக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் தமிழ் அமைப்புகள் மட்டுமல்ல, இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்துள்ள சிங்கள மற்றும் அனைத்து மக்களது அமைப்புகளுடனும் சென்று உரையாட நான்தயாராக இருக்கின்றேன்.

ஒரு பக்கம் தமிழர் என்ற முறையிலும் மறுபுறம் தெற்கில் சிங்கள மக்கள் வாழும் கொழும்பு மாவட்ட எம்.பி என்ற முறையிலும் நான் இந்த பாத்திரத்தை வகிப்பது பொருத்தமானது என நம்புகிறேன். அரசில் அமைச்சு பதவிகளை பெறுவதை விட இதுதான் பிரயோசனமானது எனவும் நான் நம்புகிறேன் என்றார். (ம-7)

# மோ.சைக்கிள் போட்டி; 19 வயது இளைஞன் பலி

## விளையாட்டு வினையானது

(கொழும்பு)

பொகுந்தர பிரதேசத்தில் சட்டவிரோத மோட்டார் சைக்கிள் போட்டியின்போது இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து பிலியந்தலை பொகுந்தர ஐ.சி.சி வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

போட்டியின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் காயமடைந்த மற்றுமொரு இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் பிலியந்தலை, பெல்வத்தை, கோரகபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 19 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.(ம-7)

# புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை நீக்கியது ஏன்?

## கொந்தளிக்கிறார் விமல் வீரவன்ஸ



(கொழும்பு)

பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே புலம்பெயர் அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட்டதாகவும் அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடை ஜனாதிபதி ரணில் அரசாங்கத்தினால் நீக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு வலியுறுத்தினார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது? தடை விதிக்கப்பட்டமைக்குக் காரணங்கள் இருந்தன அல்லவா? தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த 6 அமைப்புக்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே குறித்த அமைப்புக்களிற்கான தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூறவேண்டும்.

இப்போது அந்தத் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் தணிந்துவிட்டதா என கேள்வி எழுப்பிய விமல், அப்படி இல்லாவிட்டால் தடை நீக்கப்பட்ட மைக்கு உண்மையான காரணம் என்ன? அதை அறிந்து கொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு எனவும் கூறினார்.

என்ன காரணத்துக்காக 6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் முக்கிய தனிநபர்கள் மீதான தடை நீக்கப்பட்டது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன் அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு தெளிவான அறிவிப்பை வெளியிட வேண்டும்.

தடை செய்யப்பட்டிருந்த அமைப்புக்கள் தங்களது நோக்கங்களைக் கைவிட்டிருக்க வேண்டும் அல்லது அந்த அமைப்புக்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்பு இல்லாமல் போயிருக்க வேண்டும். இந்த இரண்டில் எது நடந்தது என்பதை அறியும் உரிமை மக்களுக்கு உள்ளதாகவும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (ம-7)

# நாட்டைவிட்டு வெளியேறியது பாகிஸ்தான் போர்க் கப்பல்

(கொழும்பு)

ஓகஸ்ட் 12ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் (PNS) "தைமூர்", இலங்கை கடற்படைக் கப்பலான (SLNS) "சிந்துரலா"வுடன் வெற்றிகரமாக பயிற்சியை மேற்கொண்ட பின்னர், இலங்கையிலிருந்து புறப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் கடற்படை மரபுகளின்படி புறப்பட்ட கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் வழமையான பிரியாவிடை வழங்கினர்.

அதைத் தொடர்ந்து, PNS "தைமூர்" புறப்படும்போது, SLNS 'Sindurala' உடன் கொழும்பு துறைமுகத்திற்கு அப்பால் கடந்து செல்லும் பயிற்சியை நடத்தியது. அந்த வகையில், இரண்டு கப்பல்களும் கொழும்பு துறைமுகத்திற்கு அப்பால் சூழ்ச்சி மற்றும் தேடல் மற்றும் மீட்புப் பயிற்சிகளை மேற்கொண்டன. (ம-7)


கண்ணீர் அஞ்சலி

தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாண மேற்தரக் கிளையின்
உத்தியோகத்தர் திருமதி கிருஜா தவேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி ஸ்கந்தராஜா
சந்தானலட்சுமி



அவர்கள் காலமான செய்தியை அறிந்து
துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவருடைய ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாண மேற்தரக் கிளை. (12446)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12443)

076 825 7716 (ஆகாஸ்)

வேலைவாய்ப்பு

யாழ்.வடமராட்சியில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு
கம்பியூட்டர் ரைப்செற்றிங் மற்றும் அச்சக
வேலைகள் செய்யக்கூடியவர்கள் தேவை.
(பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:-
077 832 9477 (C-4744)

காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029 (12448)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.